A few days since Mrs. C. was in our rooms to receive our monthly supply of reading-matter, and, in speaking of the state of the school, said, 'We have many things now to distress and annoy us; but when I think of the change in our condition in twenty five years, this is like the Millennium. Then no one dared to teach a coloured person to read and write, and a school for this race was only permitted in Africa.'

THREATS FOR ABILITY TO WRITE.

'" When I was a child my mother, who was free taught me to read and write, and after I was able, to go out and serve, I went to take care of a lady of this city who had gone into Maryland for a summer's excursion.

'" We stopped at the house of a planter in one of the southern countries, when one day my Mistress, writing a letter to Washington, asked me if I should not like to say a word to my mother. I said I should be glad to do so. "Come then," said she, "and write a line in my letter." I went to the table and took her pen in hand and commenced writing. At that moment the planter came in, and, looking at me, cried out in the severest manner and with fierce oaths, "what are you about? A negro writing! I will have your back stripped. You shall not stay an hour on my place. I will have no nigger writing about me!" " I was speechless and trembling with fear, for I know how fully I was in their power, and that there was no law nor piety for me. That day we had to leave the house and went on into the next country. But now what a change! In every place where there are one dozen colored families we have a school. Books are sent to us. Papers are published for us. Teachers come to us. Now every thing and a multitude of friends encourage us.'

THE MARTYR FOR OBEDIENCE TO GOD.

"When mistress had started from the house of the man who had frightened me so, we went twenty or more miles to the house of another planter, that my mistress knew. We were just in time for a great camp-meeting. All the people of the country were there, and many whites and blacks professed conversion."

"The mansion house of the estate was surrounded by the cabins or quarters of the slaves, fifty or sixty in number. For several nights after the meetings, the slaves had prayer-meetings in their houses, and sang and shouted greatly to the disturbance of the master. One evening the noise had been greater than ever, and, in the midst of it, the master sent for the leading blackman to come to him.

"I was near, and heard every word when the man came up before his master. He was a large, powerful man, and had a manly, honest look that made every one respect him. Eight or ten ladies, and several gentlemen, were on the portice to listen to the conversation.

"The slave with uncovered head, stood before his master waiting to be spoken to. "Dick," said the planter, "what is the meaning of this hideous noise? If you were whipped by devils, you could not make a more horrible howling. Now Dick, I can bear a great deal, but more of this I cannot stand. Now I say, Dick, stop it, or I will be—if I don't cut your heart and tongue out. You hear me?

"Yes, Massa; but the blessed Gospel is from God, and if he command us to pray, and you command us not to pray, what shall we do Massa?.

"Instantly the master sprank to his feet full of rage, and walking up to the slave, he seized him by the throat, and with a tone of fury that made the blood of every one cold, cried out, "I tell you, you—black scoundrel, God Almighty himself shall not interfere with my orders. Stop your praying, or I'll shoot you like a wolf. "Massa, said the slave,in the calm manner of one who had made up his mind to die, "if we refuse to obey God we will sink into hell, and that is worse than the whip of de overseer.

"The rage of the master was now beyond all bounds. He struck the slave with his fist; knocked him down and kicked him in the face, and sprang up and down on him until he was exhausted. Not one uttered a word. Not a hand was stretched out, but some of the white ladies and gentlemen said he was a very saucy nigger, and deserved it.

"The master then called for the overseer, and he, with three or four of the blacks, bore up the blessing man to the whipping-pen. We soon heard the whip coming down on the poor victim's back. At first there were loud cries of agony, then low moans, and then no sound but the lash; and long before the scourgings ended, the man was insensible. To bring him to life and rouse him by pain, his back was washed with brine.

"All that night not one dared to go to the poor mangled man. Not even his wife or little children. The slaves, in the mean time, covered around their cabins and in the shade of the big house, and not one spoke above a whisper, for each one feared the same fate.

"But one flogging did not satisfy the master, for, in two days the overseer was ordered to repeat it. And, after this, Dick never spoke again; but on the next morning it was whispered around that he was dead, and in a little time we saw a rude coffin taken to the pen, and poor Dick was carried out and buried under the shadow of some trees away off in the woods. Not one word was said."

"I do believe if any planter, Quaker, or neighbour had made a complaint against the master, and charged him with the death of his slave, the accuser would have been shot. Then all the slaveholders and many others said, "The niggers must be kept down." I do not know how long the planter lived, or when he died, but I heard that his sons and sons-in-law are in the rebel in army."

---

## LITERATURE.

### The Freedom of the Press.

(continued from page 191)

A Free Press is a great blessing. In times of trouble it may sound harsh, and its lashes may cut deep into the flesh, but it is the rod of correction. What physical force could not achieve, the press by a single movement completes. When every other means has failed one consolation is left in the Free Press. Look at France. There sovereigns can wade through a sea of human blood to a throne; there "the king can do no wrong" because his wrongs are not permitted to be noticed by his subjects. No remarks odious, or in the least offensive, to the monarch can appear in print or pain of a long and tedious imprisonment, not to say, ruinous fines. Woe be to the straight forward Patriot who may live in an Age of Terror, whose voice may be heard above the din of a disaffected multitude; it were better for him had he never been born. The guillotine yawns for him, and without accusation trial, or defence he is hurried to the ever memorable "Place de greve". Contrast this with England. When everything is lost, possessions, credit and renown, one thing is left and that is the spirit of liberty. What care they for the snarlings of their enemies if the spirit of their fathers still survives! What care they for the power of their unguided oppressors as long as they have a voice through their Free Press!

Look now on the other side—the evil results of free discussion. Look at Junius the wonder of the eighteenth century, rolling over his enemies, and crushing them under the weight of his bitter sarcasm. Lord Mansfield, Horne Tooke, the Duke of Grafton, and even his sovereign were each in his turn, made to feel the withering contempt, the most frightful exposure and the most biting sarcasm, which nothing but a vindictive feeling, a long concentrated rage, could have enabled that writer to produce. How can we describe the amount and enormity of ruin caused by sceptical publications in England! How many souls have been thereby driven to utter perdition! How many death beds have been rendered miserable by the coruscations of their evil genius! Speaking of Paine's "Age of Reason" alone, Mr. Charles Phlips, the celebrated Irish Barrister, thus proceeds, "But indeed the fate of this half infidel, half trading martyr, matters very little in comparison of that of the thousands he has corrupted. He has literally disseminated a moral plague agaiust which even the nation's guarantine can scarce avail us. It has poisoned the fresh blood of infancy, it has disheartened the last hope of age. If his own account of its circulation be correct, hundreds of thousands must be at this instant tainted with the infectious disease whose sting dies not with the destruction of the body."

And if we may be allowed to speculate, how many wars and feuds which have laid waste cities and depopulated extensive districts are to be attributed to the Freedom of the Press. I am of opinion that the attacks made on the Emperor of the French in *Punch* and other English Journals of a like nature,have more to do with,the hostile relation in which France stands towards England than anything else.

Speaking of our own island, suppose the publication of scurrilous letters were allowed freer scope; who of us are safe from the cowardly attacks of anonymous writers. At various times I must admit, that vile effusions without a single particle of truth have flooded the papers. Under the plea of freedom of expression, the sacred character of the hearth and home has been invaded. This has been so well put by an eloquent writer that I cannot refuse my readers the benefit of it. "Some of them indeed—the basest of the race—who were cruel only from cowardice and calculating selfishness, are perfectly willing to transfer their venal pens to any government that does not disdain their infamous support. These men republicans from servility, who publish rhetorical panegyrics on massacre, and who reduced plunder to a system of ethics, are as to protect slavery as anarchy. But the more daring—I had almost said, the respectable—ruffians cannot so easily bend their heads under the yoke. These fierce spirits had not lost "the unconquerable will, the study of revenge, immortal hate". They have the luxuries of servitude to the mean and dastardly hypocrites, to the Belials and Mammons of the infernal faction."

---

Dear sir,

I shall thank you to give insertion in a corner of your paper to the following.

That rice is not procurable even at the rate of six pence per measure, consequently the inhabitants of this District prefer to satisfy their hunger with-

Pease at eight pence per measure.
Potatoes at four pence per lb.
Gram at six pence per measure.
American flour at one shilling per pound respectivly.

There are plenty of useful men in this District that can be engaged for the purpose of planting Coffee, and it is provided with Blacksmiths, Farriers, Tailors, Carpenters, Masons and Contractors, to felljungle &c. &c. Last week the blowing of the wind was so strong that the thatch from some of the roofs of the bootiques, were damaged, except the Post Office and the Rest House which being at a distance of five or six yards from each other, and the former well thatched, and the latter newly shingled.

People are anxious to purchase the piece of Crown Land adjoining the Govenment Rest House, and they wish it sold without any further delay.

Amicus.

Nov. 29th, 1864. Happoo'elle.

---

CASH RECEIPT FOR 1864.

| | | s. | d. |
|---|---|---|---|
| *Calpentyn*—John Casechetty, Esq. | - | 18 | 2. |
| *Wannarponne*—A. Ellayatamby, Esq. | - | 4 | 0. |
| *Jaffna* Rev. W. Talbot | - - | 17 | 4. |
| *do* Rev. C. C. McArthur | - | 8 | 0. |
| *do* S. Savarimootoo Modelier | - | 6 | 0. |
| *do* A. Lyman, Esq | - - | 6 | 0. |
| *Tanjore*—V. Veravagoepully, Esq. | - | 9 | 0. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்காபிமானி.

௲௮௱௬௩ம் ௵ மார்கழி ௴ ௨ந் ௳.

## ORIENTAL BANK CORPORATION.

## விளம்பரம்.

### ஒறியேன்றல் வங்குச்சாலே.

இதன் உதவிச்சாலேயொன்று சென்றமாதம் ௧௬ந் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து இப்பொழுது நடைபெற்றுவருகிறது.

நடபடியான பணவைப்புக் கணக்குக்காரியங்கள் இப்பொழுது அதிற் றொடங்கப்படலாம்.

சேமத்திற்காய்க் கட்டும்பணங்கள் ஒருமாசம், இரண்டுமாசம், ஆறு மாசக்காலங்களுக்கு அவ்விடம் வைக்கப்படலாம். அப்படி வைக்கப்படும் பணத்திற்கு வருடமொன்றிற்கு முறையே நூற்றுக்கு, மூன்று, நாலு, ஆறுவீதம் வட்டிகொடுக்கப்படும். பணச்சேகரிப்பிற்காய் அந்தந்த இடங்களுக்குரிய கைச்சீட்டுகளும் ஏற்கப்படும்.

தலை ஸ்தானத்திலிருந்து இத்திரவியசாலையைச்சேர்ந்த சகல கிளைச்சாலையின் பேருக்கும், சென்னைத் திரவியசாலையைச்சேர்ந்த கொச்சியின் உதவித் திரவியசாலையின் பேருக்கும், ஸ்கொற்லந்தைச்சேர்ந்த தேசத்திற்கும், மாகாணத்துக்கும், வர்த்தகத்துக்குமடுத்த சகல கிளைத் திரவியசாலைகளின் பேருக்கும், அயரலந்தைச்சேர்ந்த மாகாணத் திரவியசாலைகளின் பேருக்கும் உண்டிகள் கொடுக்கப்படும்.

உண்டி மாற்றுதலுக்குரிய கழிவு முதலானகாரியங்களின் விவரங்களை இத்திரவியசாலையிற்றானே தெரிந்துகொள்ளலாம்.

ஆர். வி. டன்லோப், உதவிக்காரியகர்த்தர்.
ஏ. எவ். வில்ஸ்வோட், சம்பிரதிக்கணக்கர்.

---



## விளம்பரம்.

சென்னபட்டணத்தில் முதற்தரத்தில் இலேஞ்சி இதன்கீழ்க் கையோப்பம் வைத்திருக்கிறவரிடம் மூன்றுமுழம் ௰க சிலிங்காகக் கைப்பணத்துக்கு வாங்கிக்கொள்ளலாம்.

சி. கனகரத்தினம்.

மானிப்பாய்.

---

## நூறுபவுண்டு நன்கொடை!!!

இந்தியாதேசம், லொன்தோனகரம் சீனதேசம், கண்டிநகரமுதலியஇடங்களில் இஸ்தாபிக்கப்பட்டிருக்கும்சாட்டர்பத்திரம்பெற்ற வியாபாரவிஷபத் திரவியசாலை கண்டிநகரில்சிறப்புவாயிருந்த, சி. அரியகுட்டி என்பவரைப் பிடிக்கக்கூடிய அறிவித்தலை இன்றுதுவக்கம் ஒரு மாதத் தவணைக்குள் இதன்கீழ் கையொப்பம்வைத்திருப்பவரிடம் கொடுக்கக்கூடியவர்களுக்கு மேலேக்கண்டிருக்கும் நூறுபவுண்டு நன்கொடையாகக் கொடுக்கப்படும் என்பதை இத்தாலறிக.

இங்ஙனம் ஏ. வி. லெமார்ச்சன். மானேசர்

கொழும்பு ௲௮௱௬௩ம் ஆண்டு மார்கழிமாதம் ௧ ந் திகதி.



---

## Revd. Henry De'Zilva.—சங். என்றி. டிசில்வாபிரசங்கியார்.

இலங்காபிமானியின் எடிற்றரவர்களுக்கு,

ஐயாவே, மேலைப்பிரசங்கியார் இற்றைக்கு வெகுகாலத்துக்குமுன் இந்நகர்விட்டு மதுரை அமரிக்கன் மிசியோனைச்சேர்ந்து அவர்களுக்குள் நெடுங்காலமாய் உபதேசியாயிருந்து, குருப்பட்டம்பெற்றுத் தளராமுயற்சியுடையவராய்க் கர்த்தரின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணிவர்தவர். இவர் இப்பொழுது தன் சென்மதேசமாகிய இந்நகருற்று, நெடுநாளாய்ப் பிரிந்திருந்த தம்முடைய இனபந்துக்கள் இஷ்டர்களுடன் வாசம்பண்ணுகிறார். பிறகிட்ட வெள்ளிக்கிழமை சாயந்திரம் வெசிலியோன் பிரசங்க வங்களாவிலோர் பிரசங்கம்பண்ணினார். இவருடைய பிரசங்கத்தைக்கேட்க அத்தருணம் அவ்விடம்வந்தவர்கள் வழமையாய் வருந்தொகையினுமதிகம். இவர் தமிழ்ப்பாஷைக்கு அன்னியராயிருந்தாலும் அவ்வேளையிலிவர் பேசியயாவும் வாய்ச்சாலமாகவும் இனிமையாகவுமிருந்தன. கிறிஸ்துதாசர் முக்கியமாய்ச் செய்யவேண்டிய பிரதானமான கடமையைப்பற்றியே வற்புறுத்தலாய்ப் பேசினார். இவர் நெடுநேரம்பேசப் பிரியமுள்ளவராயிருந்தும் நேரமின்மையால் பிரசங்கத்தைச் சுருக்கத்தில் முடித்தார். முடிவில் வடதேசத்திலுள்ள சபையில் வழங்கிவருமாப்போல வேதநாயகசாஸ்திரியாரின் அதிக பிரதாபம்பெற்ற கீர்த்தனையிலொன்றைப்பாடிக் கூட்டத்தை முடித்தார். இந்நாட்டில் தமிழ்கிறிஸ்துசபையில் வழங்கிவரும் கீதத்தையொழித்து இக்கீதத்தை ஸ்தாபனம்பண்ணுவார்களாகில் சுதேசிகளாகிய எமக்கு அதிக மதுரமுற்றதாயும எங்கள் ஆற்றுமலுக்கத்தை யருட்டி எம்மைக்கர்த்தரின் விசுவாசத்தில் எழுப்பி ஸ்திரப்படுத்தக் கூடியதாகவிருக்குமென எண்ணுகிறேன். இதில் நுங்கருத்தியாதென யானறிந்திலேன்.

இப்படிக்கு, உமதுழியன்.
One Behind the Tat alias William.

---

## Steamer "Jaffna."

### யாட்பாணம் என்னும் புகைக்கப்பல்.

இக்கப்பலில் அமரிக்கன்மிசியோனைச்சேர்ந்த சில குருமாரும் வேறுமனேகருஞ் சென்னைமாநகருக்குப்போக ஆயத்தமாயிருந்தார்களெனவும் மேற்சொல்லிய உருவின் சில ருத்திரங்கள் பழுதுபட்டுப்போனபடியால் அப்படிப்போகுதல்கூடாதென அதின் காரியஞ்தர் அறிவித்தார்களென கேள்விப்படுகிறோம்.

---

## Pearl Fishery.—முத்துச்சலாபம்.

அரசாட்சியாரால் முத்துச்சலாபத்தைப் பரிசோதித்து இதிணடுத்துவரும் வருடத்தில் சலாபங்கட்டலாகுமோவெனத் தீர்ப்பிடும்படி அனுப்பப்பட்ட சோதனைக்கர்த்தர் பலனற்றதாயிருக்கின்றதென அரசாட்சியாருக்கு அறிக்கைப்பத்திரம் விடுத்தனரென நாமறியவருகிறோம். எமது இராசதானிப்பத்திரிகைகளில் மற்றவருடமட்டுமல்ல இனிமேல் ஒருபோதும் சலாபம் கட்டுகிறதற்கு வாயாதெனவும், செவ்வற்பார்முதலிய மற்றும் பார்களிலும் குஞ்சுச்சிப்பிகள்தானுங் காணப்படவில்லையென்றும் வாசிக்கிறோம். இது உண்மையாயின் இலங்கை அரசாட்சியாருக்கு இலங்கையில் வரும் பலவிதவருமானத்திலொன்றாகிய சலாபவருமானத்தில் சற்றேகேட்குமென எண்ணுகிறோம்.

---

கொலோனியல் சக்கிடுத்தாரே, காடுவேல்துறையே இதற்கென்னசெய்யப்போகுறீர்கள்? முத்துச்சிப்பிபயிர்பண்ண உங்களாலாகாதா? "கெடுவாய்!கேடுநினையாதே தானேவருங்கேடு"

இங்ஙனம் உமதுதாசன் இலங்கைவாசிகள்நேசன்.

---

அல்வாய் வித்தியாவினோதர் சொல்வாய்மனோரஞ்சித அபிப்பிராயம்.

உலகோபகாரமாய் நாம் காரியப்படுத்திய அச்சங்கிலைகளிற் குறிப்புப் பொருள்களைக் குறித்துத் தொகுத்துக் காட்டினோம். வகைவிரியிற் காட்டப்புகின் "கல்விகரையில கற்பவர்நாள்சில" என்பதினாலும் விவேகிகள் அன்னம்போல் உய்த்துணர்வாரென்பதினாலும் பொருள்வயிற் குறைவினாலுங் கூடாதிருந்துங் கூடியவளவு வருஞ் சங்கிலைகளிற் காட்டக்கூடும். மேலும் இராமவாசிட்டம் பிரபலசந்திரோதயம் பகவற்கீதை முதலிய நூல்களிற் பொருளொடுமொத்தூக்கினால் விளங்கும். கந்தப்புராணம்.

மேலுளபொருளுந் தத்தம் வினைவழிநிற்கவிப்பான்
மூலமாம்பகுதிதன்னின் முளைத்திடும்புந்திபுந்தி
யேனுமகர்தைபொன்றி லெ·துமைப்புலனுமாங்கே
வாலியககனத்தோடு பண்ணிலங்காலும்வர்த.

இராமாயணம். கண்ணுதற்காட்சியிற் கரையினளந்த
உண்முதற்பொருட்கெலாமுறையுளாவன
மண்முதற்பூதமுமாயுமென்றபோ
தெண்முதலுயிர்க்கினியம்பவேண்டுமோ.
புண்ணியமெனுசெய்யிற் பொருவில்காலமாந்
திண்ணியதிரியினிற்றெளியுஞ்சிந்தையில்
எண்ணியவிளக்கதிலிரண்டுமெஞ்சினால்
அண்ணலேவீவதற்கையமாவதோ.

பாரதம். மாயையென்றொருத்திதன்பான்மனமெனுமைந்தன்றோன்றி—தூயநல்லறிவன்றன்னைத் தோற்றமின்றிகைவத்தான்—தாயொடு தந்தைமக்கள் தாரமென்றிவர்பால்வைத்த—நேயமுமவன்றனாலே நிகழ்வதோர்நினைவுகண்டாய்." இவைபோல்வனநூல்களிற் றேடியவையை நாடினால் மனமோடியுணரும். பரந்துகிடந்த நூல்களிற் கரந்துகிடந்த குறிப்புப்பொருளை நாம் உணர்திறபடி பேலோர் பேற்கோளோடு புணர்ந்தினவளவெவ்வளவோவவ்வளவு விளங்கலாம். கல்வியினளவைக் கரைபிடித்தல் கடவுளன்றி மற்றெவர்க்குமேலா. "எல்லாமறிந்தவனுமில்லையொன்றும் அறியாதவனுமில்லை"

குற்றமேதெரிவார் குறுமாமுனி—சொற்றபாவினுமோர்குறை சொல்லுவார்—கற்றிலாவென்கவிவழுவாயினும்—முற்றுநாடிவல்லோருய்த்துரைக்கவே. அகஸ்தியர் முதலியரில் இக்குற்றப்பற்றுமேயென்றால் எம்போலியரையேன்பேசுவான். நக்கீரப்புலவரோடு வாதாடிய திருவாலவாய்ப் பெருமானுக்கும் இதுசாருமேயென்றால் யாரையும் எவரையும் ஏன் பேசுவான் ஏசுவான் நாலடி. "கல்லாரேயாயினுங் கற்றாரைச்சேர்ந்தொழுகின
நல்லறிவுநாளுந் தலைப்படுவர் தொல்சிறப்பி
னொண்ணிறப்பாதிரிப்பூச்சேர்தலாற்புத்தோடு
தண்ணீர்க்குத்தான்பயந்தாங்கு." ஆதலாற் கற்றாரிற் கற்பிலி கற்கலாம். நெ. திருத்தலைசபான்.

---

இலங்காபிமானிப் பத்திராதிபரே,

ஸ்ரீ. ஸ்ரீ. சங்கரபண்டிதரும் அவர் கூட்டாளிகளும், சிலவருஷங்களாகக் கிறிஸ்த வேதாகமத்துக்கெதிராகப் பிரயாசப்பட்டு ஓர் கண்டனமியற்றுகின்றனரென்றும், அது ஒருவேளை கொஞ்சநாட்களிலே பிரசித்தமாகுமென்றும் அறிவது உமது கையொப்பக்காரருக்குப் பிரயோசனமாயிருக்கும். யார்கடாட்சத்தினாலது தோற்றுகின்றதோ அவர் நாமங்கட்குத் தகுந்ததாயிருக்கும்படி, சைவசமய சாமார்த்தியமுழுதும் அதிற் பாரிக்கப்பட்டிருக்குமென்று நான் உத்தேசிக்கிறேன். அப்படியிருந்துங் கற்றறிந்த கண்டனகர்த்தாக்கள் முழுவதுஞ் சாவதானமாய் நடக்க நிண்ணயம்பண்ணினது மாத்திரமன்றித், தங்கள் கண்டனத்தினின்றும், கொப்ப அல்லது தாக்கப்படக் கூடிய பகுதிகள்களையப்படுமளவும், அதைப் பிரசித்தம்பண்ணுதிருக்கத் தீர்மானித்திருக்கிறார்கள்.

சங்கரபண்டிதரும் வேறு சில வாலிபரும், எனது உத்தேசத்தின்படியே, தங்கள் பிரயாசமான முயற்சிக்கு, மேற்குறித்திருக்குஞ் சித்தியடையும் நோக்கத்துடன் சங். எற்சு. டி. பொஸ்வேல் ஐயரிடத்திற் (Rev H. D. Buswell) போய் அதை அந்தரங்கத்திற் தர்க்கித்துப்பார்த்தற்கு ஓர் சமயத்தை நியமிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். அவரோ இருதிறத்தவர்களுடைய கேழ்வி மறுமொழிகளையும் ஓர் சைவனும் ஓர் கிறிஸ்தவனும் இருந்து எழுதவேண்டுமென்ற பொருத்தனையைக் கேட்டுக்கொண்டதேயன்றி வேறிபாதொன்றையுங் கேளாமல் ஒரேமுறையிலே அதற்குச் சம்மதித்தார்.

சங்கரபண்டிதருங் கூட்டாளிகளும், உண்மையைக் கண்டுபிடிப்பதே தங்களுடைய அத்தியந்த அபிப்பிராயமென்று, சங். பொஸ்வேல் ஐயருக்கு உறுதிப்பாடுபண்ணினார்கள்.

சங். பொஸ்வேல் என்னும்ஐயர் அவர்களுடையஆட்சேபங்களை நிராகரித்தற்குவேண்டியஎத்தனங்களைப்பண்ணுறதும்அதற்குவேண்டியபோக்கையறிதற்கும்தகுந்த முஸ்திதுபண்ணும்முகாந்தரமாக, அவர்களுடைய கண்டனத்தினோர் பிரதியை அவர்களைச்சோதித்துப்பார்ப்பதற்காக அவர்களிடத்திற் கேட்பது நல்லதென்று எண்ணினார். ஆனாலும் அந்த யோக்கியச் சகோதரரோ திரண்டாலோசனைசெய்து, இந்த மரியாதையான கேழ்விக்கிடங்கொடாதபடி தீர்மானித்துக்கொண்டார்கள். "உண்மையையறியும் வாஞ்சைசக்கது ருசியாதாயினும், சங். பொஸ்வேல் ஐயரவர்கள் எவ்வளவும் எத்தனமில்லாதிருந்தும் உண்மையே மேற்கொள்ளுமெனவுணர்ந்து சங்கரபண்டிதரையும் அவர் கூட்டாளிகளையும் சந்திக்கப் பூரணசித்தமுடையராகி அவர்கள் தம்மிடத்தில் வரும்படி விரும்பாநிற்கின்றனர். இங்ஙனம், சத்தியப்பிரியன்.

---

இலங்காபிமானிப்பத்திராதிபருக்கு வந்தனம்.

ஐயா, இதன்பின்னால் நான் எழுதப்போகிற சமாசாரம் சத்தியவிர்த்தியிற் பிரீதியுள்ளவர்களுக்குச் சந்தோஷத்தைத் தருமென்றெண்ணுகிறபடியால் தங்கள் பத்திரிகையில் இதற்கு இடங்கொடுக்கவேணுமெனப் பிரார்த்திக்கிறேன்.

சென்றுபோன ௧௮ ந் திகதியாகிய வெள்ளிக்கிழமை தங்கள் பத்திரிகையிற் பிரசுரஞ்செய்திருந்த விளம்பரத்தின்படி ௨௩ ந் திகதியாகிய செவ்வாய்க்கிழமையிரவு ௭ மணியளவில் உவஸ்லியன்மிஷனைச்சேர்ந்த செட்டித்தெருப்பள்ளிவங்களாவில் கூடியிருந்த கூட்டத்தின் நடபடிகளை அறியும்வண்ணம் நானும் அவ்விடஞ்சென்றேன் செல்லும்போது சிவசமயிகளும் பிறமதஸ்தரும் தனித்தனியாயும் திரளாயும் நான் நோக்கிச் செல்லும் இடத்திற்கே முன்னேறுவதைக்கண்டேன். ஆனால் முன்னேகினவர்கள் பள்ளிகூடத்துவாசலைக் கிட்டியவுடனே சுப்பிரிங்கோட்டுச் சேவகர் கோட்டுவாசலில் நின்று உட்பிரவேசிப்போரிற் சிலரைத் தள்ளிவிடும்பாவனையாய்ச் சைவப்பிரபுக்களிற் சிலர் "கொடுக்குக்கட்டிக்கொண்டு" வீதியின் இருதிக்கிலுமிருந்துவந்த சைவரையும் பிறரிற் சிலரையும் பிரவேசிக்கவொட்டாமற் தடைபண்ணிக்கொண்டார்கள். என்னுடன்போன இரண்டொருவரையும் அவ்விதமாய்க் கைப்பற்றியிழுத்தும் இழுத்தவர்களை உதறிவிட்டு என்னுடன் பிரவேசஞ்செய்தார்கள். பின்பு அக்கும்பிலுள்ளவர்களில் ஒருவருக்கு குள்ளப்பையலோடிப்போய் கழுத்திற் பெரிய பறைபொன்றுமாட்டிய ஆரோ ஒருவனை அழைத்துக்கொண்டுவந்து மேற்படி பள்ளிக்கூடத்துக்கெதிராகயிருக்கும் பிள்ளையார்கோவிலினுட்புகுந்து பிள்ளையாருக்கெதிரே நின்று பறைபோட்டுக் கூத்தாடிக் கைகொட்டி ஆரவாரம்பண்ணினார்கள். தெருவில்நின்ற சைவப்பிரபுக்களிற் சிலர் பாதிரிமாரையுங் கிறிஸ்தவர்களையும வாயிலெழுந்தபடி தூஷித்துக் கேலிபண்ணினார்கள். இவைகளெல்லாவற்றையும் ஆச்சரியமாயும் விசனமாயும் பார்த்துக்கொண்டுநின்ற நான் சைவரிற் சற்றே யோக்கியமானவரில் ஒருவரைக் கூப்பிட்டு இவைகளின் தாற்பரியமென்னவென்று வினவினேன் "சற்றே பொறும் அவசரப்படாதிரும் இன்னும் வரும்" என விடைகொடுத்தார். ஏழுமணிவேலை நூறுபெயர்மட்டுக்கு வங்களாவில் வந்துகூடிவிட்டார்கள். சங்கைபொருந்திய ஏ. ஈ. ஈ. மெசர்ஸ் கில்னர் மிற்சில் ஐயர்மாரிருவரும் வந்துசேர்ந்தார்கள். மேலும் அரைமணித்தியாலத்துக்குள்ளாக மூன்றுநூறுபெயருக்கு மேற்படச்சனங்கள்வந்துகூடினார்கள். மேஸ்தர் கில்னர் ஐயர் எழுந்து தாம் இங்கிலீசிலே சொல்லயிருந்த காரியங்களைத் தமிழிலே சனங்களுக்குத் தெரிவிக்கும்படி மேஸ்தர் நெவின்ஸ உவாத்தியாரைக் கேட்டுக்கொண்டார். அதின்பின் சாதுரியமானவுங் காரியத்துக்கடுத்தவும் ஒரு சிறு பிரசங்கஞ்செய்தார். இலங்கையிற் தாம் வந்து பதினெட்டு வருஷங்களாயும் அத்தருணத்திற் கூடிவந்திருந்த மாதிரியான கூட்டத்தைப்போல விசேஷிக்கப்படத்தக்கதான கூட்டத்தை முன்னொருபோதும் தாம் கண்டதில்லையென்றும் இத்தனைபெருந்தொகையான சைவரும் பிறரும் கூடிவந்திருக்கும் நோக்கத்தைப்பார்த்தால் வியக்கப்படத்தக்கதாய் இருக்கின்றதென்றுஞ்சொன்னார். மேலும் அவ்விடத்தில் அந்திரவுகூடிய கூட்டத்தின் நோக்கத்தைக்குறித்துச் சிலர் தப்பெண்ணங்கொண்டவர்களாய் இருந்தார்களெனவும் பேசித் தம்முடைய சாமர்த்தியத்தை கல்வித்திறமையை அல்லது வேறொன்றைக் காட்டவும், குதர்க்கம்பண்ணித் தம்முடைய நேரத்தை வீணாய்ச்செலவிட எண்ணிவராமல் நேசமாயும் பட்சமாயும் சைவருடனும் பிறருடனும் சமாதானமாய்ப்பேசிக் கிறிஸ்துமார்க்கத்துக்கு விரோதமாக அவர்கள் சொல்லும் நியாயமான ஆட்சேபங்களைக்கேட்டு உத்தரங்கொடுக்கும் நோக்கமாக வந்ததாயும் சத்தியத்தை மறைக்கலாம் அதைப்பலவிதத்திலும் வெருட்டி ஓட்டிவிடலாமென்றும் அபிப்பிராயமுடையவர்களாய்ச் சிலர்செய்யும் முயற்சிகளைப்பார்த்தால் வேடிக்கையாயிருக்குதென்றும் அப்படியான பிரயாசமெல்லாம் அபத்தமாய் முடியுமென்றும் அதற்கேற்ற இரண்டொரு உதாரணங்களையுங் காட்டி சைவர் சொல்லக்கூடிய ஆட்சேபங்கள் யாவும் கிறிஸ்தமார்க்கத்துக்கு விரோதமாக அநேகநாளுக்குமுன் இருந்த சிவமதவிரோதிகளாற் கொண்டுவரப்பட்ட நிராகரணங்களேயன்றி நூதனமானவைகளாய் இருக்கமாட்டாதென்றும் சைவர் நூதனமாகக் கொண்டுவரும் ஆட்சேபம் ஒவ்வொன்றிற்கும் ஐந்து சிலின் இனாமாகக் கொடுப்போமென்றும், மார்க்கவிஷயத்தைக்குறித்து ஆராய்வுசெய்தல் சகலருடைய கடமையென்றும், சைவரிற் சிலர் திரண்டு இவ்வித ஆராய்ச்சிசெய்யவென்று ஒருசங்கம் ஏற்படுத்தியிருப்பதைக் கேட்டுத் தாம் வெகுசந்தோஷப்படுவதாயும், அவர்கள் அப்படிச்செய்வதே தமது விருப்பமென்றும், (Dr. Duff) டவ் என்னுங் குருவுடைய முயற்சியினால் இந்தியாவுக்கு இராசமாபுரியாகிய கற்குத்தாபட்டணத்திலுள்ள சுதேசிகள் மார்க்க ஆராய்வுசெய்யும்படி ஒரு பெரிய சங்கத்தையேற்படுத்தி ஓரட்சமின்றி மார்க்ககாரியங்களை விசாரணைசெய்து வருவதாயும், அச்சங்கமூலமாய்த் தாங்கள் பெற்றுவரும் நன்மைகளுக்குக் காரணனாகிய அந்தக்குருவுக்குத் தங்கள் நன்றியுணர்வைக் காட்டும்படி மகாபெரிதானவுஞ் சிங்காரமானவும் ஒரு மாளிகையைத் தங்கள் கைப்பொறுப்பிற் கட்டியெழுப்பி அவருக்கு இனமாகக் கொடுத்துவிட்டார்களென்றும், வண்ணார்பண்ணையில் வசிக்கும் சைவருந் தமக்கும் அவ்விதமான ஓர் மாளிகையைச் சீக்கிரத்தில் கட்டிக்கொடுப்பார்களென்று நம்புவதாயும் வினோதவார்த்தைகள் பேசி இன்னுஞ்சிலபல விஷயங்களைக் குறித்தும் நெடுநேரமாகப் பேசினார். அவைகளை முற்றிலும் இவ்விடத்தில் விபரித்தால் தங்கள் பத்திரிகை இடந்தராமாட்டாதென்று அஞ்சி நிறுத்துகிறேன். கேள்விகேட்கப் பிரியமுள்ளோர் உடனே கேட்கலாமென்று, தருந்த ஆயத்தத்துடனே வராதவர்கள் பிரியமானால் இதனடுத்த செவ்வாய்க்கிழமை அவ்விடத்திலேயே கூடப்போகிற கூட்டத்தில் வந்து கேட்கலாமென்றும், அல்லது இன்னும் பிரியமானால் தங்கள் கேள்விகளை எழுதி ("Christian Defence Association") என்னுங் கூட்டத்து லேககரிடத்தில் அனுப்பிவைத்தால் அச்சப்போட்ட புஸ்தகமூலமாய் உத்தரங் கொடுக்கப்படுமென்றுஞ் சொல்லப்பட்டது. அத்தருணத்தில் ஒருவர் எழுந்து தமக்குச்சிலகேழ்விகளிருப்பதாகவும் எழுத்தில் எழுதிக்கொடுப்பதாயுஞ் சொல்லியிருக்கக் கூட்டம் முடிவுபெற்றது. ஆனால் நடுப்பிரசங்கத்தில் நான் முன்சொல்லிய சைவப்பிரபுக்கள சனங்களிற் சிலரை சைவஉபாத்தியார் கிறிஸ்தம் பாதிரிகளுடைய கூட்டத்துக்குப் போகக்கூடாதெனக் கெஞ்சி அழைத்துப்போய்ச் சைவப்பள்ளியில் விளக்கேற்றி நவினப்பிரசங்கஞ்செய்து பாதிரிமாரையுங் கிறிஸ்தவர்களையும் வெகுகெட்டியாய்த் தூஷித்து அதிற்திறமாய்ப் பயின்றவர்களாதலால் கொஞ்சமும் இளைத்துப்போகாமல் வழக்கப்படி ஆடிப்பாடிக்காரியத்தை நடத்தினாகளெனக்கேழ்வி.

பத்திராதிபரே, வண்ணார்பண்ணையிற் சைவர் செய்யுங் கூத்துகளைப்பார்த்தால் வெகுவேடிக்கையாகத்தான் இருக்கின்றன. ஆனால் இவர்கள் செய்கையை உற்றுநோக்கும் பிறதேச சனோபகாரிகளாகிய ஐரோப்பியர் கறுத்தவர்களைக் குறித்து எவ்வித கருத்துடையவர்களாய் இருப்பார்களென்பதைச் சைவர் சிந்தியார்போலும். தமிழர் தேர்ந்தபுத்தியுள்ளவர்களும் நற்குணமுடையவர்களும் ஆசாரம் மரியாதை நாகரிகமுதலியவைகளிற் சிறந்தவர்களுமென்று ஐரோப்பியர் இதுவரைக்குங்கொண்டிருந்த எண்ணத்தைச் சைவரிலெல்லாருமல்லக் கைகொண்டஅழவான சிலசைவர் மாத்திரம் தங்கள் செய்கையினால் அழித்துப்போடப் பிரயாசப்படுவதுபோற் தோன்றுவது விசனமானகாரியமல்லவா? "ஐயோ கபடிகளாகிய வேதபாரகரே பரிசேயரே, உங்களுக்கு ஆபத்துவரும்; மனுஷர் பரமஇராச்சியத்திற் பிரவேசியாதபடி நீங்கள் அதைப்பூட்டிப்போடுகிறீர்கள். நீங்கள் அதில் பிரவேசிப்பதுமில்லை, பிரவேசிக்கவிரும்புகிறவர்களைப்பிரவேசிக்கவிடுவதுமில்லை." (இன்னும்வரும்.)

இப்படிக்கு உண்மைவிளம்பி.

யாழ்ப்பாணம் ௲௮௱௬௩ம் ஆண்டு கார்த்திகை மாதம் ௨௯ ந்திகதி.

---

Edited by C. W. Cathiravalupully and Printed and Published by N. Strong at the Press of Ripley & Strong Manepay, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org